இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 ஏ (1) எனும் உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையின் மூன்றாவது அறிக்கை

2023 டிசம்பர் தொடக்கம் 2024 மே வரையான காலப்பகுதிக்கானது

உள்ளடக்கம்

உள்ளடக்கம் i

1. அறிமுகம் 1

2. பேரவையின் கூட்டங்கள் 1

3. அரசியலமைப்பின் 41ஆ எனும் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களாக ஆட்களை நியமிப்பதற்கான விதப்புரை 1

3.1. தேர்தல் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விதப்புரை 1

3.2. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விதப்புரை 2

3.3. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் பதில் கடமைக்கான நியமனம் 3

4. அரசியலமைப்பின் 41இ எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ ஜனாதிபதியின் விதப்புரைகளின் ஒப்புதல்/நிராகரிப்பு 3

4.1. உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் நியமனம் 3

4.2. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கான நியமனம் 4

4.3. நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் நியமனம் 4

4.4. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்கான நியமனம் 5

4.4.1. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவியில் செயற்படுவதற்கான நியமனம் 5

4.4.2. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்கு திரு டி. எம். டபிள்யூ. டி. தென்னகோனை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை 6

5. அரசியலமைப்புத் தவிர்ந்த எழுதப்பட்ட சட்டங்களால் அரசியலமைப்புப் பேரவைக்கு விதிக்கப்பட்டுள்ள அல்லது ஒதுக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் 6

5.1. நலன்புரி நன்மைகள் சபையின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் 6

5.2. இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை மற்றும் நாணயக் கொள்கைச் சபை உறுப்பினர்களின் நியமனம் 7

5.3. மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழு உறுப்பினர் நியமனம் 7

5.4. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினை நியமித்தல்..... 8

5.5. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு (OMP) உறுப்பினர்களை நியமித்தல் 9

6. பேரவையின் கடமைகள் மற்றும் பணிகளைச் செயலாற்றுதல் மற்றும் செயற்படுத்தலுடன் தொடர்புடைய விதிகளை ஆக்குதல் 9

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களுக்கான கோரிக்கைகளுக்கு பதிலளித்தல்..... 10

8. பேரவையின் உறுப்பினர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை விண்ணப்பங்கள்..... 10

1. அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் (இதனகத்துப் பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பிடப்படுவது) அரசியலமைப்புப் பேரவையானது (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பிடப்படுவது) அரசியலமைப்பினாலும் ஏனைய சட்டங்களாலும் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும் செயற்பாடுகளையும் செயலாற்றுவதற்கும் செயற்படுத்துவதற்கும் ஆணையைக் கொண்டுள்ளது. 2023 டிசம்பர் தொடக்கம் 2024 மே வரையான காலப்பகுதியின் பொழுது அரசியலமைப்புப் பேரவையால் செயற்படுத்தப்பட்ட பணியானது, அரசியலமைப்பின் 41 ஏ (1) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் இயைபுற்று இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்படுகிறது

2. பேரவையின் கூட்டங்கள்

மீளாய்வின் போதான காலப்பகுதியின் பொழுது பின்வரும் நாட்களில் பதினாறு (16) தடவைகள் அரசியலமைப்புச் சபை கூடியுள்ளது.
2023.12.01, 2023.12.05, 2023.12.10, 2023.12.12, 2023.12.30, 2024.01.02, 2024.01.12, 2024.01.19, 2024.01.30, 2024.02.19, 2024.02.26, 2024.03.21, 2024.04.02, 2024.04.25, 2024.05.08, 2024.05.14

3. அரசியலமைப்பின் 41ஆ எனும் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களாக ஆட்களை நியமிப்பதற்கான விதப்புரை

3.1. தேர்தல் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விதப்புரை

அரசியலமைப்பின் 41ஆ(3) மற்றும் 103 எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் பேரவை, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நான்கு (04) ஆட்களை நியமிக்க முன்பு விதந்துரைத்தது.

எனவே, தேர்தல் ஆணைக்குழுவின் எஞ்சியுள்ள ஒரு (01) பதவிக்காக உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்காக விதந்துரைப்பதற்கு விண்ணப்பதாரர்களை / நியமத்தவர்களை பேரவை பரிசீலித்தது.

விண்ணப்பதாரர்களின் / நியமத்தவர்களின் பொருத்தம் மற்றும் தகுதி ஆகியவற்றைப் பரிசீலித்த பின்னர், அரசியலமைப்பின் 41 ஆ (3) மற்றும் 103 எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக பேராசிரியர் லக்ஷ்மன்

திசாநாயக்கவை நியமிக்கப் பேரவை ஏகமனதாக விதந்துரைத்தது. விதப்புரையை கௌரவ சனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் பேரவை நியமத்தருக்கு எதிராக நிலுவையில் ஏதேனும் வழக்குகள் உள்ளனவா மற்றும் அத்தகைய வழக்குகளின் தன்மை தொடர்பாக அவரிடம் கேட்டறிந்து நிச்சயப்படுத்திக்கொண்டது.

3.2. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விதப்புரை

அரசியலமைப்பின் 41ஆ எனும் உறுப்புரை மற்றும் 2023 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகத் தகுதியான மற்றும் பொருத்தமான ஆட்களை நியமனம் செய்வதற்கு விதந்துரைப்பதற்கான ஆணையைப் பேரவைக்கு வழங்குகிறது. அதற்கமைவாக, பேரவை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமனம் பெறுவதற்காக பரிசீலிக்கப்படுவதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகைமையுள்ள தனியாட்களிடம இருந்து விண்ணப்பங்களைக் கோரி செய்திப்பத்திரிகையில் விளம்பரம் ஒன்றை வெளியிட்டது.

பேரவை ஏற்றுக்கொண்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் அடிப்படையில் அத்தகைய தனியாட்களின் விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இணைப்பிரதிகள் மற்றும் விதித்துரைக்கப்பட்ட மாதிரிக்கு புறம்பான விண்ணப்பங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக அறுபது (60) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 4 (1), 4 (2) மற்றும் 5 ஆகிய பிரிவுகளின் ஏற்பாட்டின் பிரகாரம் பொருத்தம் மற்றும் தகுதி ஆகியவற்றைப் பரிசீலித்த பின்னர் பின்வரும் மூன்று விண்ணப்பதாரர்களை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப் பேரவை ஏகமனதாக விதந்துரைத்தது :-

I. கௌரவ நீதியரசர் விஜேசுந்தர முதியன்சேலாகே நீல் பராக்கிரம இத்தவல
II. திரு. சேத்திய குணசேகர
III. திரு. கபுகமகே பெர்னாட் ராஜபக்ஷ

மேலும், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 4(3) ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுவின் தலைவராக நீதியரசர் கௌரவ விஜேசுந்தர முதியன்சேலாகே நீல் பராக்கிரம இத்தவல அவர்களை நியமிப்பதற்காக விதந்துரைப்பதற்குப் பேரவை ஏகமனதாக தீர்மானித்தது.

3.3. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் பதில் கடமைக்கான நியமனம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் திரு.ஈ.டபிள்யு.எம்.எல். ஏக்கநாயக்க அவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான விடுமுறைக்கான அங்கீகாரத்தையும் மற்றும் அந்தப் பதவியில் பதில் கடமை புரிவதற்கு ஓர் உறுப்பினரை நியமிக்க வேண்டியதன் தேவைப்பாட்டையும் அறிவிக்கும் 2024.03.22 திகதிய சனாதிபதியின் செயலாளரிடம் இருந்தான ஒரு தொடர்பாடலைப் பேரவை பரிசீலித்தது.

அதன்பிரகாரம், அரசியலமைப்பின் 41ஆ (2) எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், திரு ஈ.டபிள்யூ.எம்.எல். ஏக்கநாயக்க வெளிநாடு செல்லும் 2024.04.20 முதல் 2024.05.06 வரையான காலப்பகுதிக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர் திருமதி தயா கமனி ரேணுகா ஏகநாயக்கவை பேரவை ஏகமனதாக விதந்துரைக்கத் தீர்மானித்தது.

4. அரசியலமைப்பின் 41இ எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ ஜனாதிபதியின் விதப்புரைகளின் ஒப்புதல்/நிராகரிப்பு

4.1. உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் நியமனம்

பேரவையின் இரண்டாவது அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது போன்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவரான கௌரவ என்.பி.பி.டி.எஸ். கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதற்கான அரசியலமைப்பின் 41 இ(1) எனும் உறுப்புரைகளின் கீழ் கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை தொடர்பாக பேரவையின் நிலைப்பாட்டை கௌரவ ஜனாதிபதிக்கு பேரவை தெரிவித்தது.

இதற்குப் பதிலளிக்கையில், கௌரவ ஜனாதிபதி, இவ்விதப்புரையை மீள்பரிசீலனை செய்யுமாறு பேரவையிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன்பிரகாரம், அரசியலமைப்பின் 41 உ(4) எனும் உறுப்புரையின் பிரகாரம் கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை குறித்து தீர்மானம் மேற்றுக்கொள்வதற்கு பகிரங்க வாக்கெடுப்பை நடாத்தப் பேரவை கலந்துரையாடித் தீர்மானித்ததுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவரான கௌரவ என்.பி.பி.டி.எஸ். கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை பேரவையினால் அங்கீகரிக்கப்படவில்லை.

4.2. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கான நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவரான கௌரவ என்.பி.பி.டி.எஸ். கருணாரத்ன வெளிநாடுகளுக்குச் செல்லும் 2024.04.05 முதல் 2024.05.05 வரையான காலப்பகுதியில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ ஆர்.எம். சோபித ராஜகருணாவை நியமிக்குமாறு அரசியலமைப்பின் 41 இ(2) மற்றும் 109(1) எனும் உறுப்புரைகளின் கீழ் கௌரவ ஜனாதிபதியிடமிருந்து வந்த விதப்புரையைப் பேரவை பரிசீலனை செய்தது.

பெயர்குறித்த நியமத்தர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அடுத்த மிக சிரேஷ்ட நீதிபதியாக உள்ளதுடன் அவரது தொழில் வாழ்க்கையில் கறைபடியாத வரலாற்றினைக் கொண்டவர் என்பதைப் பேரவை அவதானித்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவரான கௌரவ என்.பி.பி.டி.எஸ். கருணாரத்ன வெளிநாடுகளுக்குச் செல்லும் 2024.04.05 முதல் 2024.05.05 வரையான காலப்பகுதியில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ ஆர்.எம். சோபித ராஜகருணாவை நியமிப்பதற்கு அரசியலமைப்பின் 41 இ(4) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் இணங்கியதாக கௌரவ நீதியரசரின் கருத்துக்களையும் பேரவை பெற்றுக்கொண்டதுடன் கௌரவ ஜனாதிபதியின் விதப்புரைகளுக்கு ஒப்புதலளிப்பதற்கு ஏகமானதாகத் தீர்மானித்தது.

4.3. நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் நியமனம்

2024 மார்ச் 01 அன்று உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி, கௌரவ டி. பி. எஸ். ஜயவர்தனவின் ஓய்வுடன் வெற்றிடமான நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் பதவிக்கு, உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி, கௌரவ விஜித் கே மலல்கொடவை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி, கௌரவ விஜித் கே மலல்கொட, உயர் நீதிமன்றத்தின் மிகச் சிரேஷ்டமான நீதிபதி ஆவார் எனப் பேரவை அவதானித்தது. அதற்கமைவாக, அரசியலமைப்பின் 41 இ மற்றும் 111 ஈ எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுடன்

பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரின் சுயவிபரக் கோவையைப் பரிசீலித்ததன் பின்னர் நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக, உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி, கௌரவ விஜித் கே மலல்கொடவை, நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை அங்கீகரிப்பதற்குப் பேரவை ஏகமனதாகத் தீர்மானித்தது.

4.4. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்கான நியமனம்

4.4.1. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவியில் செயற்படுவதற்கான நியமனம்

திரு சி. டி. விக்ரமரத்னவின் ஓய்வுடன் வெற்றிடமான குறிப்பிடப்பட்ட பதவிக்கு பொருத்தமான அலுவலர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, அரசியலமைப்பின் 41இ(2) எனும் உறுப்புரையின் பிரகாரம், 2023.11.29 அன்றிலிருந்து செயலூக்கம் பெறும் வகையில் மூன்று (03) மாத காலத்திற்காக பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவியில் செயற்படுவதற்கு சிரேஷ்ட பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, திரு டி. எம். டபிள்யூ. டி. தென்னகோனை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது.

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்கு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேவை மற்றும் இந்த நியமனம் மூன்று (03) மாத காலத்திற்காக மாத்திரமே என்ற விடயத்தை பரிசீலித்ததன் பின்னர், 2023.11.29 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் மூன்று (03) மாத காலத்திற்காக பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவியில் செயற்படுவதற்கு சிரேஷ்ட பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, திரு டி. எம். டபிள்யூ. டி. தென்னகோனை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை அங்கீகரிப்பதற்குப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானித்தனர்.

4.4.2. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்கு திரு டி. எம். டபிள்யூ. டி. தென்னகோனை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை

2024 பெப்ரவரி 29 ஆம் திகதியிலிருந்து செயலூக்கம் பெறும் வகையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்கு சிரேஷ்ட பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, திரு டி. எம். டபிள்யூ. டி. தென்னகோனை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது.

நீண்ட கலந்துரையாடலின் பின்னர், சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, திரு டி. எம். டபிள்யூ. டி. தென்னக்கோனை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையைப் பேரவையின் நான்கு (04) உறுப்பினர்கள் அங்கீகரித்தனர், இரண்டு (02) உறுப்பினர்கள் தீர்மானம் எதுவும் மேற்கொள்வதிலிருந்து தவிர்ந்திருந்த அதேவேளை இரண்டு (02) உறுப்பினர்களால் இந்தத் தீர்மானம் அங்கீகரிக்கப்படவில்லை. கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை தொடர்பான அனுமதி அல்லது நிராகரிப்பு அரசியலமைப்பின் 41உ (4) எனும் உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்டது போன்று ஆகக்குறைந்தது ஐந்து (05) உறுப்பினர்களால் ஆதரிக்கப்படவில்லை எனப் பேரவை அவதானித்தது.

5. அரசியலமைப்புத் தவிர்ந்த எழுதப்பட்ட சட்டங்களால் அரசியலமைப்புப் பேரவைக்கு விதிக்கப்பட்டுள்ள அல்லது ஒதுக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

5.1. நலன்புரி நன்மைகள் சபையின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்திற்கமைய நலன்புரி நன்மைகள் சபையின் உறுப்பினராக திருமதி.ஆர்.என்.அனீஸ் அவர்களை நியமிக்குமாறு கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் விதந்துரைக்கப்பட்ட 29.11.2023 திகதியுடன் இணங்குவதற்குப் பேரவை ஏகமனதாக தீர்மானித்தது.

5.2. இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை மற்றும் நாணயக் கொள்கைச் சபை உறுப்பினர்களின் நியமனம்

ஆளுகைச் சபை உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்ஜீவ ஜயவர்தன மற்றும் கலாநிதி சுமித்த அநுர பண்டார ஏக்கநாயக்க ஆகியோரின் பதவி விலகலையடுத்து அப்பதவிகளில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு 2023 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை உறுப்பினர்களாக திரு.ஹெக்டர் மனில் எந்தனி ஜயசிங்க மற்றும் திரு. ரஜீவ் அமரசூரிய ஆகியோரை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையினைப் பேரவை கருத்திற்கொண்டது.

ஆளுகைச் சபை உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் தகைமையின்மைகளுக்கு ஏற்ப பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களின் பொருத்தப்பாட்டினை பேரவை உறுதி செய்தது மற்றும் திரு. ரஜீவ் அமரசூரிய மற்றும் திரு.ஹெக்டர் மனில் எந்தனி ஜயசிங்க ஆகியோரை மத்திய வங்கி ஆளுகைச் சபையின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையினை அங்கீகரித்தது. மேலும், கூறப்படும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்கள் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குறுத்தப்படும் ஏதேனும் நிதி நிறுவனங்களின் இடையீடுகளில் இருந்து தமது இராஜினாமாவைச் சமர்பித்தல் மற்றும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்கள் தமது தனிப்பட்ட இயலுமைகளால் இலங்கை பணச் சந்தையை எச்சந்தர்ப்பத்திலும் கையாளக்கூடாது ஆகிய நிபந்தனைகளுக்கமைய பெயர் குறித்த நியமனங்களைப் பேரவை அங்கீகரித்ததாக கௌரவ ஜனாதிபதிக்கு பேரவை அறிவித்தது.

5.3. மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழு உறுப்பினர் நியமனம்

மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவுக்கு நான்கு (04) உறுப்பினர்களை நியமிப்பதற்கு பேரவை தீர்மானித்துள்ளதுடன் மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவின் எஞ்சியுள்ள உறுப்பினர் பதவிக்குப் பொருத்தமான நபரைத் தெரிவு செய்வதற்காக எஞ்சியுள்ள விண்ணப்பதாரர்களின் பட்டியலை மீள்பரிசீலனைக்குட்படுத்தியது.

விண்ணப்பதாரர்களைக் கருத்திற்கொண்டு, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கமைய மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவின் உறுப்பினராக திரு.ஏக்கநாயக்க ஆரச்சிலாகே வீரசேனவை நியமிப்பதற்கு பேரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியது.

மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில், குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர்களுடைய பதவிக்காலம் பற்றிக் குறித்துரைக்கப்படவில்லை. இருப்பினும், நியமிக்கும் அதிகாரம் கொண்டது எனும் வகையில் பேரவையானது குழுவின் ஆணையைக் கருத்திற்கொண்டு, அனைத்து உறுப்பினர்களையும் இரண்டு (02) வருட காலத்துக்கு நியமிப்பதற்குத் தீர்மானித்தது.

எவ்வாறாயினும், அதனைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தைத் திருத்துவதற்காக மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவின் உருவாக்கத்திற்கென முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டிருப்பதாகக் கணக்காளர் நாயகத்தினால் பேரவைக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கமைய, நடைமுறையிலுள்ள சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் வரையில் நியமனங்களை மேற்கொள்ளாது இருப்பதற்குப் பேரவை இணங்கியது.

5.4. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினை நியமித்தல்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினை நியமிப்பதனைப் பரிந்துரைப்பதற்குப் பொருத்தமான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி செய்தித்தாள் விளம்பரம் ஒன்றினை பேரவை பிரசுரித்தது. விளம்பரத்தின் தொடர்ச்சியாக, நகல்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட முறைவடிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு (12) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

விண்ணப்பதாரர்களின் அனுபவம் மற்றும் தகைமைகளைக் கருத்திற்கொண்டு, 2023 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் தலைமையதிபதியாக திரு. வக்குபுறகே கனிஷ்க தமித் விஜேரட்ன அவர்களை நியமிக்க விதந்துரைப்பதற்குப் பேரவை ஏகமனதாகத் தீர்மானித்தது.

5.5. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு (OMP) உறுப்பினர்களை நியமித்தல்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நான்கு (4) உறுப்பினர்களினதும் பதவிக்காலம் 2024.04.29 அன்று முடிவடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் ஏற்பாடுகள், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களை நியமிக்கப் பொருத்தமான நபர்களை கௌரவ சனாதிபதி அவர்களுக்கு விதந்துரைக்கும் பொறுப்பினைப் பேரவைக்கு அளிக்கின்றது.

இதற்கமைய, தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கான பத்திரிகை விளம்பரமொன்றினைப் பிரசுரிப்பதற்குப் பேரவை தீர்மானித்தது. பாராளுமன்ற இணையத்தளம், பாராளுமன்ற சமூக ஊடகத் தளங்கள் மற்றும் அரசாங்க வர்த்தமானி ஊடாகவும் இது விளம்பரப்படுத்தப்பட்டது.

6. பேரவையின் கடமைகள் மற்றும் பணிகளைச் செயலாற்றுதல் மற்றும் செயற்படுத்தலுடன் தொடர்புடைய விதிகளை ஆக்குதல்

பேரவையின் பரிசீலனைக்காகத் திருத்தப்பட்ட விதிகளின் தொகுப்பொன்றைச் சட்டவரைஞர் திணைக்களம் அனுப்பியிருந்தது. திருத்தப்பட்ட விதிகளைக் கருத்திற்கொண்டு, பேரவையானது சில திருத்தங்களை முன்மொழிந்தது. எவ்வாறாயினும், பேரவையின் பரிசீலனைக்கு மேலும் திருத்தப்பட்ட வரைபொன்றைச் சட்டவரைஞர் திணைக்களம் அனுப்பியிருந்தது.

சட்டவரைஞர் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற திருத்தப்பட்ட விதிகளின் வரைபு மற்றும் பேரவையினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பற்றி கௌரவ சட்டமா அதிபருடனும் சட்டவரைஞர் திணைக்களத்துடனும் பேரவை கலந்துரையாடியது. தேவையேற்படும் போது பேரவைக்கு விதிகளினைத் திருத்துவதற்கான ஏற்பாடுகளினை உள்ளடக்கப் பேரவை தீர்மானித்தது.

2023 டிசெம்பர் 31 அன்று பேரவையின் விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன், 2024.01.10 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்விதிகள் மற்றும் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் தற்போது பேரவையினால் மீளாய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களுக்கான கோரிக்கைகளுக்கு பதிலளித்தல்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பின்வரும் எண்ணிக்கையில் தகவல்களுக்கான கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றிருந்தன. சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் பதில்கள் அனுப்பப்பட்டன: –

கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை	7
தகவல் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	5
நிராகரிக்கப்பட்டவற்றின் அல்லது மறுக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை	2
மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	1
பதிலளிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	1
நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	0

8. பேரவையின் உறுப்பினர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை விண்ணப்பங்கள்

i. SC FR 317/2023
ii. SC FR 318/2023
iii. SC FR 319/2023
iv. SC FR 04/2024
v. SC FR 06/2024
vi. SC FR 12/2024
vii. SC FR 14/2024
viii. SC FR 67/2024
ix. SC FR 75/2024
x. SC FR 80/2024
xi. SC FR 71/2024
xii. SC FR 72/2024
xiii. SC FR 79/2024
xiv. SC FR 82/2024

xv. SC FR 68/2024

xvi. SC FR 84/2024

xvii. SC FR 35/2024

xviii. SC FR 105/2024

xix. SC FR 110/2024

xx. SC FR 113/2024